

ஈரோடு வீரப்பன்சத்திரம் கொங்கு வேளாளர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு மேற்கொண்டு திட்ட முகாமில் கொடுக்கப்பட்ட கோரிக்கை மனுவின் மீது உடனடி தீர்வு பெற்ற மனுவின் தீர்ப்பு ஆனணயினை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சிந்துஜா, பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன், மாமன்ற உறுப்பினர் சுகந்தி தங்கமணி உள்ளிட்ட பலர் உள்ளனர்



சட்டத்துறை அமைச்சர் ரகுபதி அவர்களை தலைமை செயலகத்தில் சந்தித்து திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தனது திருவெறும்பூர் தொகுதிக்கு தேவையான கிளை நீதிமன்ற அமைப்பது குறித்து விவாதித்தார். திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் கிளை நீதிமன்றங்கள் உள்ள நிலையில், எனது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, மையப் பகுதியான திருவெறும்பூரில் கிளை நீதிமன்றம் அமைத்து தர ஆவண செய்ய வேண்டுமென சட்டத்துறை அமைச்சரிடம் அவர் வலியுறுத்தினார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில்

# தமிழ்மரபு - பண்பாட்டுப் பரப்புரை - மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சி!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பங்கேற்பு!

பெரம்பலூர், செப். 1 –

உயர்கல்வித்துறை சார்பில், தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வாக நடத்தப்படும் மாபெரும் தமிழ்க்கனவு நிகழ்ச்சி பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கலந்து கொண்டு ”கல்வி சிறந்த தமிழ்நாடு என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் உயர் கல்வித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த மாபெரும் தமிழ்க்கனவு நிகழ்ச்சியின் வாயிலாக தமிழ்நாடு அரசு மற்றும் உயர் கல்வித் துறை மாணவர்களுக்கு என்ன கருத்தினை சொல்ல வருகிறது என்பதை கல்லூரி மாணவர்கள் அனைவரும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு மொழியும் எந்த ஒரு இனமும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக இருக்கிறது என்றால் அந்த வரலாற்றை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அப்படியான ஒரு மொழி தான் தமிழ் மொழி. பல்வேறு எதிர்ப்புகளை மீறி, ஒரு மூத்த மொழியாகவும் , முதல் மொழியாகவும் தமிழ் மொழி திகழ்ந்து வருகிறது.

தமிழ் மொழியில் இருக்கும் கம்பீரத்தை மாணவ, மாணவிகள் அறிந்து கொள்ள வேண்டும். உலகில் பல்வேறு மொழிகள் காணாமல் போய் உள்ளது. ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கண்டறியப்பட்ட திருக்குறள், சிலப்பதிகாரம் உள்ளிட்ட பல்வேறு நூலகள் நம் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது. பல்வேறு படையெடுப்புகளுக்குப் பிறகும் இந்தியாவில் தமிழ்மொழி செம்மொழி அந்தஸ்தை பெற்று நீடித்திருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நம் தமிழ் மொழியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்காக அறிவித்த திட்டம் தான் மாபெரும் தமிழ் கனவு திட்டம். புதுமைப்பெண், தமிழ் புதல்வன், நான் முதல்வன், மாபெரும் தமிழ் கனவு போன்ற பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்திய காரணத்தால் தான் இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் இருந்தாலும் உயர்கல்வி பயின்று வருவதில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது. அதற்காக பாடுபட்ட நிறுவனங்கள், ஒத்துழைத்த பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் பெற்றோர்கள் என அனைவரின் உழைப்பில்தான் உயர்கல்வியில் தமிழகம் முதலிடம் என்ற பெருமையை இன்று நாம் பெற்றுள்ளோம். இது ஒரு நாள் முயற்சியில் கிடைத்ததல்ல. பல வருட முயற்சியாகும். அதற்கு அடிப்படை காரணம் தமிழ் மொழியின் இருமொழிக் கொள்கையாகும். தமிழும், ஆங்கிலமும் என்ற கொள்கையை தமிழக அரசு பின்பற்றி வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடந்த 25 வருடங்களுக்கு முன்பாகவே தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய டைடல் பார்க் நிறுவனத்தை சென்னையில் உருவாக்கினார்கள். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத தொழில்நுட்ப புரட்சியை 25 ஆண்டுகளுக்கு முன்பே செய்துள்ளார். அதனுடைய வளர்ச்சி இன்று தகவல் தொழில்நுட்பத்திலும் தமிழ் மொழி சிறந்து விளங்குகின்றது. உலகத்தில் எந்த மொழி அதிகமாக பயன்படுத்துகிறது என்ற ஆய்வில் ஆங்கிலத்திற்கு இணையாக தமிழ் மொழி என கண்டறியப்பட்டுள்ளது. அய்யன் வள்ளுவர் எழுதிய திருக்குற ளுக்கு அதிகப்படியான நபர்கள் மொழிபெயர்த்து விளக்கமளித்ததன் விளைவு, உலகத்தில் பல நூல்கள் இருந்தாலும், தற்போது திருக்குறள் உலகப் பொதுமறை நுலாக திகழ்ந்து வருகிறது. இதனால் அண்டை மாநிலத்திற்கு இல்லாத பெருமை நமது தமிழுக்கும், தமிழ் மண்ணிற்கு சேர்ந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ள புது மைப் பெண் திட்டத்தால் 30 சதவீத மாணவிகள் கூடுதலாக உயர் கல்வி பயின்று வருகின்றனர். ஒரு காலத்தில் பெயர்களுக்கு பின்னால் சாதிகள் இருக்கும். அண்டை மாநிலங்களில் தற்போதும் அது தொடர்ந்து வருகிறது. திராவிடத்தின் பெரும் முயற்சியால் தமிழகத்தில் தற்போது பெயர்களுக்கு பின்னால் தாங்கள் படித்து வாங்கிய பட்டங்கள் பிஏ, பிஎஸ்சி எம்ஏ என எழுதப்பட்டு வருகிறது. படித்திருந்தால்தான் பல செய்திகளை நமது அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்ல முடியும்.

உலகம் தோன்றி பல்லாயிரம் வருடங்களுக்கு பிறகு தான் நமக்கு கல்வி கிடைக்கின்றது. நம்முடைய முன்னோர்களுக்கு கிடைக்காத கல்வி நமக்கு கிடைத்துள்ளது என்றால் நாம் இதனை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இங்கு வந்துள்ள மாணவ மாணவிகள் அனைவரும் சாதிக்க பிறந்த வர்கள். நமக்கு கிடைத்திருக்கிற தமிழ் மொழி பெருமை போல் உலகில் வேறு எவருக்கும் கிடைக்கவில்லை. மிக கவனமாக இதனை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும். அறம் செய்ய விரும்பு என்ற மூன்று வார்த்தைகள் உலகை ஆச்சரியப்படுத்தி உள்ளது. இந்தப் பெருமை தமிழுக்கே உரியது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு ‘உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி, ‘தமிழ்ப் பெருமிதம்’ ஆகிய கையேடுகள் வழங்கப்படுகின்றன ‘தமிழ்ப் பெருமிதம் ’சிற்றேட்டிலுள்ள துணுக்குகளை வாசித்துச் சிறப்பாக விளக்கம் அளிக்கும் மாணவர்களைப் பாராட்டி பெருமிதச்செல்வி / பெருமிதச்செல்வன் எனப் பட்டம் சூட்டிச் சான்றிதழ்களும் பரிசும் நிகழ்வின் இறுதியில் வழங்கப்படுகிறது. சொற்பொழிவாளர்களிடம் தரமான கேள்விகளை எழுப்பும் மாணவர்களைப் பாராட்டி கேள்வியின் நாயகி / கேள்வியின் நாயகன் எனப் பட்டம் சூட்டிச் சான்றிதழும் பரிசும் வழங்கப் படுகிறது. இந்தநிகழ்வின் 50வது சொற்பொழிவு கூட்டத்தில் கலந்து கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

கடைக்கோடியில் அமர்ந்துள்ள மாணவனை அழைத்து தமிழைப் பற்றி பேசு என கூறினால் என்னை விட சிறப்பாக பேசும் அரங்கம் இந்த அரங்கம். தமிழ் மொழி குறித்து நான் பேசியதை ஆராய்ந்து பார்த்தால் கடல் அளவில் ஒரு கை அளவே. இன்னும் அறிந்து கொள்ள வேண்டியதே கடலளவு உள்ளது. தமிழின் சிறப்பு இன்னும் மகத்தானது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். வந்தோம் சென்றோம் என்றில்லாமல் இங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்குகளில் சென்று மாணவர்களுக்காக தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் திட்டங்கள் குறித்து உருவாக்கப்பட்டுள்ள புத்தகங்கள் துண்டு பிரசுரங்களை மாணவர்கள் வாங்கி படித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு தாய் தந்தை செய்யாததை ஒரு ஆசிரியர் செய்யாததை ஒரு கல்லூரி செய்யாததை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து 2 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 20 சொற்பொழிவாளர்களை 200 நிகழ்ச்சிகளில் பேச வைத்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். இந்த அறிய முயற்சியினை முன்னெடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மனதார வாழ்த்தி பாராட்டி மகிழ்கிறேன். நான் முதல்வன் திட்டம் செயல்படுத்துவதற்கு முன்பு தமிழகத்தில் அகில இந்திய தேர்வுகளில் 15 நபர்கள் மட்டுமே தேர்ச்சி பெறுவார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு அகில இந்திய தேர்வுகளில் தமிழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இதே போன்ற ஒரு நிகழ்ச்சியில் இங்கு அமர்ந்துள்ள மாணவர்களில் ஒருவர் ஆட்சித் தலைவராக அமர வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இதுதான் முதற்கட்ட இலக்கு. இது தொடரட்டும். நாம் தமிழ் மொழியை பாதுகாப்போம், தமிழ் மொழியை வளர்ப்போம், மற்ற மொழிகளை விட தமிழ் மொழி தான் சிறந்தது என்று உலகிற்கு காட்ட மாபெரும் தமிழ் கனவு திட்டம் பயன்படட்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர், தமிழ்ப்பெருமிதம் சிற்றேட்டிலுள்ள குறிப்புகளை வாசித்துச் சிறப்பாக விளக்கம் அளித்த மாணவர்களைப் பாராட்டி பெருமிதச் செல்வி / பெருமிதச் செல்வன் என்ற சான்றிதழ் மற்றும் பரிசுப் புத்தகங்களையும், சிறப்பான பங்களிப்பை வழங்கும் மாணவர்களைக் பாராட்டி கேள்வியின் நாயகி / கேள்வியின் நாயகன் என்ற சான்றிதழ் மற்றும் பரிசுப் புத்தகங்களையும் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண், நான் முதல்வன், கல்லூரிக்கனவு, உயர்வுக்குப்படி உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் தொடர்பாக அமைக்கப்பட்டிருந்த 17 அரங்குகளை உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, அரசு திட்டங்கள் குறித்து இடம்பெற்றிருந்த விழிப்பு ணர்வு துண்டு பிரசுரங்களையும், கலந்து கொண்ட அனைத்து மாணவ,மாணவிகளுக்கும் உயர் கல்வி வேலை வாய்ப்பு வழிகாட்டி மற்றும் தமிழ் பெருமிதம் என்ற தலைப்பிலான இரண்டு புத்தகங்களையும் மற்றும் வழங்கினார்.

இபந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்,

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்கள், வேப்பந்தட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குரும்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ் கலை அறிவியல் கல்லூரி, தந்தை ஹேன்ஸ் ரோவர் பொறியியல் கல்லூரி, வாலிகண்டபுரம் அன்னை ஆயிஷா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, பெரம்பலூர் ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளை சேர்ந்த சுமார் 1500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர். க.ராதாகிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர் (பொ) சக்திவேல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ச.வைத்தியநாதன், வேப்பந்தட்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் (பொ) சேகர், தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி முதல்வர் இரா. அருள்மொழியான், அரசு மற்றும் தனியார் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ,மாணவிகள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி, கரும்புகடை பகுதி, தெற்கு மண்டலம், வார்டு எண்.86க்குட்பட்ட பகுதிகளிலுள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் காளவாய், ஆயிஷா மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் உதவி ஆணையர் குமரன், பகுதி கழக செயலாளர்கள் ஜெயலாப்தின், லோகநாதன், சிவசக்தி, மாமன்ற உறுப்பினர்கள் அஹமது கபீர், பாபு மற்றும் கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட அனைத்து துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாமன்ற கூட்டம் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. துணை மேயர் ரா. வெற்றிசெல்வன், துணை ஆணையாளர்கள் அ.சுல்தானா, த.குமரேசன், மண்டல குழுத்தலைவர்கள் வே.கதிர்வேல் (வடக்கு), இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் (கிழக்கு), கே.ஏ.தெய்வயானை தமிழ்மறை (மேற்கு), நிலைக்குழுத் தலைவர்கள் தீபா தளபதி இளங்கோ (கணக்குகள்), மாலதி நாகராஜ் (கல்வி & பூங்கா), பெ.மாரிசெல்வன் (பொது சுகாதாரம்), வி.பி.முபசீரா (வரிவிதிப்பு & நிதி), சாந்தி முருகன் (பணிகள்), சோமு (எ) சந்தோஷ் (நகரமைப்பு), மு.ராஜேந்திரன் (நியமனக்குழு), நிலைக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டல உதவி ஆணையர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் ரமேஷ் பிரபா தாயார்

# சீத்தாலெட்சுமி நூற்றாண்டு தொடக்க விழா - வாழ்க்கை வரலாறு புத்தகம்!

## ஆ.இராசா எம்.பி. வெளியிட்டார்!

*பெரம்பலூர், செப், 1 -*

*பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற, கேலக்ஸி தனியார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் பிரபா தாயார் சீத்தா லெட்சுமி அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் அவருடைய வாழ்க்கை வரலாறு புத்தகம் வெளியீட்டு விழா நிகழ்ச்சி, பெரம்பலூர் பூமணம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.*

*கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.*

*இதில் பட்டி மன்ற பேச்சாளர் சத்தியசீலன், இலங்கை வானொலி வாசிப்பாளர் அப்துல் ஹமீது, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் ரமேஷ்பிரபா குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.*



நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம், ஓடப்பள்ளி அக்ரஹாரம் ஆர்.சி துவக்கப்பள்ளியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மற்றும் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் இளங்கோவன் ஆகியோரது தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.மா.சண்முகசுந்தரம்

### செப்டம்பர் 1 (2018)



**திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**கோவை பகுதியில் கழக முன்னோடிகளின் பெயரில் பல்வேறு மன்றம் – படிப்பகங்களை நிறுவிய இவர், இராமநாதபுரம் பகுதியில் ‘கலைஞர் தமிழ் மன்றம்’ தொடங்கி, அதில் திருக்குறள் வகுப்பும், திருக்குறள் மாநாடும் நடத்தி வந்தவர்.**

**ஒன்றுபட்ட கோவை மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**